## தமிழ்நாடு தலைகுனியாது!

# ஓ.பன்னீர்செல்வம் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



### மாவட்டக் கழகச் செயலாளர் அறிவிப்பு!

| தேதி | நேரம் | தொகுதி | ஒன்றிய/நகர/பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| மார்ச் 21 | காலை 9.00 மணி | சிவகங்கை | காளையார்கோவில் ஒன்றியம் | எ.எஸ். கார்டன் காளையார்கோவில் |
| மார்ச் 21 | மாலை 4.00 மணி | திருப்பத்தூர் | திருப்பத்தூர் ஒன்றியம், சிங்கம்புணரி, நெற்குப்பை ஆகிய பேரூர்கள் | காந்திமதி மகால் சிங்கம்புணரி |
| மார்ச் 21 | இரவு 7.00 மணி | காரைக்குடி | தேவக்கோட்டை, சாக்கோட்டை கிழக்கு ஒன்றியங்கள் மற்றும் புதுவயல் பேரூர் | எஸ்.எம்.ஜி. மஹால் தேவகோட்டை. |

**சிவகங்கை மாவட்டச் செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன் அறிவித்துள்ளார்.**

# கழகத் தலைவரின் கட்டளைப்படி சமூக வலைதளங்களில் களமாடுவோம்!

## தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகளுக்கு – அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவுறுத்தல்!

DMK IT WING

“வெற்றி நிச்சயம் அதை அடைவதற்கான இலக்கை அடைவதற்கு எவ்வித சமரசமுமின்றி இயக்கத்திற்காக உழைப்பது ஒன்றே இலட்சியம்” என்று உடன்பிறப்புகளுக்கு கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் எழுதியுள்ள ‘உங்களில் ஒருவன்’ கடிதத்தில், **“கழகத் தகவல் தொழில்நுட்ப அணியினர் ஒவ்வொரு நாளும் சமூக வலைதளங்களில் கழக அரசின் சாதனைகளைப் பதிவிட்டு அதனை அனைத்துத் தரப்பு மக்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டும்”** என நமக்கு கட்டளையிட்டுள்ளார்.

கழகத் தலைவரின் ஆணையை ஏற்று தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் அனைவரும் நம் தலைவர், இளம் தலைவர், அறிவாலயம், ஐ.டி.விங் உள்ளிட்ட சமூக வலைதளப்பக்கங்களில் பதிவிடப்படும் செய்திகளை உடனுக்குடன் பகிர்வதுடன், மாவட்ட அளவிலான சமூக வலைதளப்பக்கங்களில் பதிவிடப்பட்டுள்ள கழக அரசின் சாதனைகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

பதிவுகளில் கண்ணியமான வார்த்தைகள் இடம்பெற வேண்டும். தனிநபர் தாக்குதலோ, பெண்களைப் பற்றிய விமர்சனமோ கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும். மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். தங்கள் பார்வையில் இது போன்ற பதிவுகள் கண்ணில் பட்டால் அணியின் HR team இடம் தெரிவிக்கவும். அணியின் வாட்ஸ்ஆப் சேனலை அனைவரும் பின்தொடர்ந்து, அதிலுள்ள பதிவுகளை அவரவர் வாட்ஸ்ஆப் குரூப்களில் பதிவிட்டு, கடைக்கோடி மக்கள் வரை கழகத்தின் சாதனைகளைக் கொண்டு சேர்க்க வேண்டும்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை
நாள் : 20.3.2026

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

## பூம்புகார் தொகுதியில்

# கழக அரசின் சாதனைகளை பிரச்சாரம் செய்து வெற்றிக்குப் பாடுபடுவோம்!

### செம்பனார்கோயில் வடக்கு – தெற்கு – மத்திய ஒன்றிய வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

மயிலாடுதுறை, மார்ச் 21 -

மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகார் தொகுதிக்கு உட்பட்ட செம்பனார்கோயில் வடக்கு, தெற்கு, மத்திய ஒன்றியங்கள் மற்றும் சீர்காழி கிழக்கு ஒன்றியம் ஆகியவற்றின் வாக்குச் சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ. 2) மற்றும் கழக செயல்வீரர்கள் கூட்டம் செம்பனார் கோயிலில் பி.கே.சி. திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பி.எம்.அன்பழகன் தலைமை தாங்கினார். மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து. மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், செம்பனார்கோயில் மத்திய ஒன்றிய கழக செயலாளர் அமிர்த.விஜயகுமார், சீர்காழி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பஞ்சு. குமார், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ்.கே.முத்து ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய செயலாளர் எம். அப்துல் மாலிக் வரவேற்றார். கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் எம்.எம்.சித்திக், ஏ.சி. என்.விஜயபாலன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஹர்ஷத், ஜெ.கபிலன், நத்தம் ஏ.வின்சென்ட்., தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணாசங்கரி குமரவேல், முன்னாள் ஒன்றிய குழு துணைத் தலைவர் பாஸ்கர், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் வி.எஸ்.என்.செந்தில், காளி தேசப்பன், சம்சுதீன், வைத்தியநாதன், வி.எஸ் பிரபாகர்,

மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் மற்றும் டாக்டர் வீரபாண்டியன், செம்பனார்கோயில் வடக்கு, தெற்கு, மத்திய ஒன்றிய கழக நிர்வாகிகள் சுப்பையன், நெடுமாறன், சத்தியராஜ், அமுதா அன்பழகன், சரவணன், பிரபாகர், கே.எஸ். கருணாநிதி, ஈச்சங்குடி இளங்கோவன், கண்ணங்குடி கணேசன், ரங்கநாதன் சங்கர், சாந்தி வேல்முருகன், கருணாநிதி, சிவகுமார், தெட்சிணாமூர்த்தி, சாரா சேகர், தங்கவேல், பாண்டு மற்றும்

சீர்காழி கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் தரங்கம்பாடி பேரூர் நிர்வாகிகள் ஏ.சடகோபன், எஸ்.கந்தசாமி. மதியழகன். சரவணன், ராஜா மற்றும் கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்டபிரதிநிதி தென்னரசன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் கழகத் தலைவர் தளபதியின் தாரக மந்திரமான வெல்வோம் 200 +, படைப்போம் வரலாறு! என்பதற்கு இணங்க கழகத் தலைவர், திராவிட மாடல் அரசர், முதல்வர், தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் செய்த மகத்தான சாதனைகளை ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று எடுத்துக்கூறி குறிப்பாக பெண்களுக்கு மகளிர் விடியல் பயணம், மகளிர் உரிமை தொகை மாதம் ரூ.1,000 ஆகியவற்றை எடுத்து கூறியும், அடுத்து கழக ஆட்சி அமைந்த உடன் மகளிர் உரிமை தொகை ரூ.2.000 ஆக உயர்த்தப்படும் என்று கூறி பிரச்சாரம் செய்து அனைவரையும் தி.மு.க. வாக்காளர்களாக மாற்றி, கழகத் தலைவர் தளபதி அறிவிக்கும் வேட்பாளரை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிப் பெற கழக நிர்வாகிகள், கழகத்தினர் வெற்றிக்கு உழைத்து கழகத் தலைவர் கரத்தை உயர்த்திடுவது என்றும், தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 7 வது முறை யாகவும், கழகத் தலைவர் தளபதி தலைமையில் 2 முறையாக முதல்வராக கழக ஆட்சி அமைந்திட உழைத்திடுவது என்றும்,

தலைமை கழகத்தால் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ. 2 ) மற்றும் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (பி.எல்.. சி) ஆகியோரிடம் வாக்காளர் பற்றிய முழு விபரம் குறித்து கணக்கெடுப்பு எடுக்க வழங்கப்பட்ட நோட்டை உடன் முழுமையாக பூர்த்தி செய்து அந்த பணியை முடித்து ஒன்றிய, பேரூர்ச் செயலாளர்களிடம் வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ. 2 ) மற்றும் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (பி.எல்.சி)யினர் வழங்கிடவேண்டும் என்றும், ஒன்றிய பேரூர் பகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் பூத் வாரியாக ஸ்டாலின் மகளிர் படையினர் வீடு வீடாகச் சென்று கழக அரசின் சாதனைகளை பொது மக்களிடம் எடுத்துக் கூறியும், 5 ஆண்டு கால திராவிட மாடல் அரசால் அந்த குடும்பத்தினர் பெற்ற நலத்திட்ட உதவிகளை எடுத்துக்கூறி பிரச்சாரம் மேற்கொண்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணியைச் சேர்ந்த ஸ்டாலின் மகளிர் படையினருக்கும், மகளிர் படையினருக்கு உரிய ஏற்பாடுகளை செய்த ஒன்றிய, பேரூர் செயலாளர்களுக்கும், உறுதுணையாக நின்ற கிளை, வார்டு கழக நிர்வாகிகளுக்கும் கழகத்தினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


# தமிழ்நாட்டில் பா.ஜ.க.வை நுழைய விடாமல் எஃகு கோட்டையாக முதல்வர் விளங்குகிறார்!

## செயற்குழு கூட்டத்தில் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, மார்ச் 21 -

சிவகங்கை மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் திருப்பத்தூரில் தனியார் மகாலில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட கழக துணைச் செயலாளர்தசேங்கைமாறன் வரவேற்றுப் பேசினார் .



கூட்டத்தில் கலந்து கொண்டு அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது.

கழக தலைவர், முதல்வர் அவர்கள் திட்டமிட்டு தேர்தல் பணி செய்து வருகிறார். அவரது தேர்தல் பணி பல்வேறு வீயூங்களை கொண்டதாக அமைந்துள்ளது. நம்முடைய கூட்டணியை பற்றி எதிர்க்கட்சிகள் ஏளனங்கள் செய் தார்கள். ஆனால் முதல்வரின் சாதுர்யத்தினால் நமது கூட்டணி வலுவான வலிமையான கூட்டணியாக உள்ளது.

இந்த கூட்டணி வெற்றி கூட்டணி ஆகும். எதிர்முகாமில் உள்ள பா.ஜ.க .அ.தி.மு.க கூட்டணி இன்று வரை குழப்பத்தில் நீடிக்கிறது .கழகத் தலைவர் தளபதி அவர்களின் கூட்டணி தொடர்ந்து வெற்றி பெற்று வந்திருக்கின்றது. அதற்கு வழி சேர்க்கும் வகையில் நடைபெறுகின்ற சட்டமன்ற தேர்தல்

அமைய வேண்டும் .தேர்தலில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்றத் தொகுதியில் கழகம் மற்றும் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெற நாம் அனைவரும் அயராது பணியாற்ற வேண்டும். நம்முடைய கழக அரசின் ஐந்தாண்டு சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூறினாலே நாம் வெற்றி பெற்ற விடலாம். அந்த சாதனை திட்டங்களை மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பது நமது கடமையாக அமைந்துள்ளது. பா.ஜகவிற்கு மக்கள் சக்தியும் கிடையாது கூட்டணி வலிமையும் இல்லை .அவர்களுக்கு சி.பிஐ, ஐ.டி ,இ.டி போன்ற கூட்டணி தான் உள்ளது . எனவே தளபதி அவர்கள் தலைமையிலான கூட்டணிவெற்றி பெற கடுமையாக உழைக்க வேண்டும் .அ.தி.மு.க அவர்களது நிலை யற்றத் தன்மையால் கரைந்து வருகிறது அ.தி.மு.க.வில் உள்ளவர்களை குறிப்பாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் விசுவாசமாக இருந்த முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் அவர்களை கழகத் தலைவர் தளபதி அவர்கள் அரவணைத்து கழகத்தில் அவர்களை ஏற்றுக்கொண்டார் . நம்முடைய கூட்டணி கழகத் தலைவரின் செயல்பாடுகளை எதிரிகளும் பாராட்டும் வகையில் அமைந்துள்ளது. பா.ஜ.க தமிழகத்தில் எவ்வழியில் நுழைந்தாலும் அது நுழைய முடியாத எஃகுக்கோட்டையாக கழகம் விளங்கி வருகிறது அதற்கு காரணம் முதல்வர் தளபதி அவர்களின் செயல்பாடுகள் ஆகும் .இந்த தேர்தலில் அ.தி.மு.க. தோல்வி பெறும் அப்பொழுது எடப்பாடி நம்மிடம் வந்தாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கு இல்லை .பா.ஜ.க. கழக தலைவர் கூறியது போல் அ.தி.மு.க.வை அழிப்பதற்காக மறைமுகமான சதித்திட்டத்தை தீட்டி வருகிறது.

அ.தி.மு.க .இந்த தேர்தலுக்குப் பிறகு சுக்கு நூறாக உடையும். ஏற்கனவே பல முறை அ.தி.மு.க. உடைந்துள்ளது கட்சிகளை உடைப்பதே பா.ஜ.க.வின் வேலையாகும் .ஆனால் நமது தலைவர் அவர்கள் எதிரிகள் மீதும் இரக்கம் காட்டும் தாயு மானவராக விளங்கு கிறார் .

அ.தி.மு.க கூட்டணியில் குழப்பம் தான் உள்ளது. நம்முடைய அணிக்கு முன்னாள் முதல்வர் ஓ .பன்னீர் செல்வம் மற்றும் அவரது கழகத்தினர் முழுமையாக இணைந்துள்ளதால் தென் மாவட்டங்களில் மற்றும் தமிழகத்தில் நமது கட்சி மேலும் வலுவடைந்துள்ளது .

இந்த வலிமையான கூட்டணியை வைத்து நடைபெற உள்ள தேர்தலில் வெற்றி பெறுவதற்கு நாம் அனைவரும் அயராது பாடுபட வேண்டும். இவ்வாறு அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ .மாவட்ட துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ ,செய்தி தொடர்பு துணை தலைவர் மருது அழககுராஜ், கல்லல் கே ஆர் அசோகன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் சசிவர்ணம் ஆகியோர் பேசினார்கள். இந்த கூட்டத்தில் முன்னாள் எம். எல்.ஏ..

சுப.மதியரசன், மானாமதுரை சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் போஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் பி. டி .ஆர் முத்து, பள்ளத்தூர் கே.எஸ்.ரவி. ,அம்பலமுத்து, பி.ஆர்.பெருமாள்த. உதயகுமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமை ப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், நிர்வாகிகள் மணிமேகலை முத்துச்சாமி, மார்க்ரெட் கமலா, திலகவதி கண்ணன், மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் எஸ் பாஸ்கரன், துரை.வேலன் மாவட்ட சுற்றுப்புறச் சூழல் அணி அமைப்பாளர் எஸ். எஸ்.ஏ. வல்லபாய் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி . ராஜ்குமார், மாவட்ட சிறுபான்மை நல அமைப்பாளர் என்.எம்.சாக்ளா, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுஅணி அமைப்பாளர் கே. எஸ் .நாராயணன்மாவட்ட விவசாய அணி அமைப்பாளர்ம்மு .மூருகானந்தம், பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகில ராணி நாராயணன், நகர்கழகச் செயலா ளர்கள் பெரி .பாலா, க. பொன்னுச்சாமி, சி.எம்.துரை.ஆனந்த், காரைக்குடி மாநகர செயலாளர் துணை மேயர் நா.குணசேகரன், ஒன்றிய செயலாளர்கள் எஸ். சண்முகவடிவேல், விராமதி மாணிக்கம், பூமணி, கே. பாலசுப்பிரமணியன் , எம் .ஜெயராமன், திருமலை முத்து ராம லிங்கம், பெ.மந்தகாளை, நா. நெடுஞ்செழியன் , குன்னக்குடி சுப்பிரமணியன் , நாகனி ரவி, வே. பூபால சிங்கம் ,

லெ. மு. ரவிச்சந்திரன் , சுப. சின்னத்துரை ஆர்.எம் .கென்னடி ,யோக. கிருஷ்ண குமார், வே. ஆரோக்கிய சாமி, வே. தமிழ் மாறன், கா. வெங்கட்ராமன், மா.அண்ணா துரை, துரை.ராஜா மணி, அ.முத்துச் சாமி, எம்.ஏ. கடம்பசாமி, பெ. செல்வராசன், பேரு ர் கழக செயலாளர்கள் கதிர்வேல், நாகூர் கனி, ஜெயராமன், பி.ஏநஜுமு தீன், அசோக் பிரம்மையா, மற்றும் ஒன்றிய பேரூர் நிர்வாகிகள் ஒன்றிய துணை செயலாளர்கள் சிவபுரி சேகர், எஸ். முத்துகுமார், பொருளாளர் ஏ.எம்.கண்ணன், மலைமேகு, தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர்கள் காளிமுத்து , கண்ணன், வழக்கறிஞர் பாலசுப்பிரமணியன் ,மாவட்ட ஆதிதிராவிடர் நல குழு தலைவர் கொத்தமங்கலம் சேது ,உதயம் சண்முகம், இலக்கிய அணி அழகையா , அன்பு செழியன் , கருணாநிதி , அண்ணாமலை, ஈஸ்வரன்,உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## நகரக் கழகச் செயலாளர் பெரி.பாலா ஏற்பாடு:

# தேவகோட்டையில் 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

சிவகங்கை, மார்ச் 21 -

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகர் கழகம் சார்பில் கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் பிறந்தநாள் மற்றும் இப்தார் நோன்பினை முன்னிட்டு 27 வது வட்டத்தில்1000 நபர்களுக்கு சேலை ,மளிகை பொருட்கள், ஹாட் பாக்ஸ் , ஆகிய வற்றை தேவகோட்டை நகர் கழக செயலாளர் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் பெரி.பாலா வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் நகர் கழக பொருளாளர் அன்புச்செல்வன், நிர்வாகிகள் கருணாநிதி, நகர் இளைஞரணி அமைப்பாளார் அரவிந்த், நகர் மன்ற உறுப்பினர் ரவி, நகர் மகளிர் அணி அமைப்பாளர் ராஜாத்தி முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் மும்தாஜ் , மகளிர் அணி பாண்டியம்மாள், மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் தமிழ்ச்செல்வி உட்பட வட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை நகர் கழக செயலாளர் பெரி.பாலா தலைமையில் நகர் கழக நிர்வாகிகள் செய்திருந்தனர் .



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, ஆயிரம்விளக்கு சட்டமன்றத் தொகுதி, தேர்தல் செலவினப் பார்வையாளர் பவன் லால் மீனா, (Mr. Bhavan Lal Meena (IRS (C & CE)), தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி ஐ.வளர்மதி முன்னிலையில், காவல் துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் (19.03.2026) அன்று தேனாம்பேட்டை மண்டல அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் காவல் துறையினர் மற்றும் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## சென்னையில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளிலும்

# வாக்காளர்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு!



சென்னை,மார்ச்.21-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர்கள் வாக்களிப்பதை உறுதி செய்திடும் வகையில், வாக்காளர்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, பொதுமக்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் மூலம் பல்வகையான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலமாக வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

அவ்வாறாக, நேற்று (20.03.2026) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாடசாலை தெருவில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள் மற்றும் தேசிய மாணவர் படை, நாட்டு நலத் திட்டப் பணி மாணவர்கள் மனித சங்கிலி மூலம் விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி, வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு வழங்கினர்.

ஆயிரம்விளக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மஞ்சக்கொல்லை தெருவில் உள்ள சென்னை தொடக்கப் பள்ளியில் ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் தேர்தல் நாள் குறித்த ரங்கோலி கோலமிட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் பொதுமக்கள் மனித சங்கிலி மூலம் தேர்தல் விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி, வாக்காளர்களுக்கு 100% வாக்களிக்க வலியுறுத்தும் வகையில் விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டனர்.

இதைப் போன்று அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளிலும் பல்வகையாக தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.